யோடு கலந்து அந்த மருந்தைக் கொண்டு வருகின்ற ஆய்வுகள் நடைபெற்று மருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும், நோய் வந்த 30 நாளிலிருந்து 90 நாள் வரை இந்த நோய் வந்திருக்கிறதா என்று தெரிவதில்லை. ஆகவே தான், நோயாளிகள் மருத்துவமனைக்கு உடனடியாகச் செல்லாமல் பெரும்பாலும் நோய் முற்றிய நிலையில் தான் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள். ஆரம்ப நிலையிலேயே சிம்டம்ஸ், வெளிப்பாடுகள் தெரியாத காரணத்தால் இதைக் கண்டு பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இதை முழுமையாக அழிக்கலாமா என்ற கருத்தையும் மனதில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி

* *1372* திரு. கே. ஆர். சுந்தரம் :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை இன்னும் சரிவர கூட்டுறவுச் சங்கங்களும் தனியார்களும் அமுல்படுத்தாமல் இருப்பதாக அரசுக்கு முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவ்வாறு வரப்பெற்ற முறையீடு தொழிலாளர் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை குறைந்தபட்ச ஊதியம், அகவிலைப்படி இரண்டும் சேர்த்து கணக்கிட்டு நெசவாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என நிர்வாகத்தினருக்கு அவரது சார்நிலை அலுவலர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

*10-20* மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அரசு விதித்த குறைந்தபட்சக் கூலியை, கூட்டுறவுத் துறையிலே கூட இதுவரை முழுமையாக அமுல்படுத்தாத காரணத்தால் தமிழ்நாட்டிலே

*1990 ஏப்ரல் 26]*

24—4—1990 அன்று ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் மதுரை, கரூர், காஞ்சீபுரம், குடியாத்தம் பகுதிகளில் மறியல் செய்தார்கள். அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒரு கேள்வி கேட்ட போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வதாக உறுதி கூறினார்கள். இன்று வரையிலே அது அமுலாக்கப்படவில்லை. கூட்டுறவுத் துறையிலே அமுலாக்கப்படாத காரணத்தால் தனியாரும் அதை அமுலாக்கவில்லை. இனியாவது அதை அமுலாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் கைத்தறி நெசவாளர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர் சங்கங்களாக இருந்தாலும் கூட, இந்தக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்க வேண்டுமென்று தொழிலாளர் துறையின் சார்பாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மறுத்து பல்வேறு காரணங்களைக் கூறினாலும், அதை எல்லாம் மறுத்து, குறைந்தபட்ச ஊதியத்தை நீங்கள் தந்தாக வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சில தனியார்கள், அந்தந்தப் பகுதியிலே இருக்கிறவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் தரவில்லை என்றால் அங்கே இருக்கின்ற நெசவாளர்கள் தொழிலாளர் நலத் துறையின் ஆணையரிடமோ அல்லது ஆய்வரிடமோ தெரிவித்தால், உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குச் சேர வேண்டிய தொகையை இந்தத் துறை சார்பாக வாங்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக உமையாம்பாள் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்தும், பாஸ்கரன் லுங்கி கம்பெனியிடமிருந்தும், மற்றொரு கம்பெனியிடமிருந்தும்—3 கம்பெனிகளிடமிருந்து, அங்கே வேலை செய்யும் தொழிலாளர்கள் எங்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் வேண்டுமென்று தொழிலாளர் துறையிடம் கேட்டு, அவர்களிடமிருந்து—முறையே 6,084 ரூபாயும், 8,285 ரூபாயும், 8,948 ரூபாயும் அவர்களுக்கு அவார்டாக வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சார்பாக இருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அரசின் செயலாளர் அவர்கள் இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை அங்கே நாம் அமுல்படுத்துவோமானால் அத்தனை சங்கங்களும் செயல்படாமல் போய்விடுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிற காரணம், இந்தத் துறையின் சார்பாக பல்வேறு சலுகைகள் அவர்களுக்குத் தரப்படுகின்றன என்று தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தருகிறோம். அவர்

களுக்குத் தொழில் செய்ய பல்வேறு உதவிகளைச் செய்யும் காரணத்தால் சங்கத்திலே இருக்கிற உறுப்பினர்களே அந்தச் சங்கத்திற்கு சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். இந்தக் குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்குத் தரப்படுமானால் சங்கம் சரியாக செயல்படாது என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லியிருந்தாலும் கூட தொழிலாளர் ஆணையர் அரசின் சட்டப்படி குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்களே தவிர அவர்களுக்குத் தனியாக எதுவும் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தனியார் துறையிலே வேலை செய்கிறவர்களுக்கு இந்தக் கூலி கிடைக்காமல் இருந்தால், அதற்காக நடவடிக்கை எடுத்து, வேண்டிய உதவிகளைப் பெற்றதாகச் சொல்லுகிறார்கள். நான் வற்புறுத்துவது, அரசு போட்ட உத்தரவை, அரசுத் துறையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களே அமுலாக்கவில்லை. அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் அதைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் துறை அதிகாரிகளே அதை அமுலாக்க மறுக்கிறார்களே, அப்படி என்று சொன்னால் இந்தக் கூலியை நிர்ணயிக்கும் போது இவைகளை எல்லாம் பரிசீலிக்கவில்லையா? பரிசீலித்த பிறகு தான் இது அமுலாக்கப்பட்டது. நீண்ட காலம் குழுக்கள் அமைத்து, பரிசீலனை செய்து, விசாரணை செய்ததற்குப் பிறகு தான் இது அமுலாக்கப்பட்டது. எனவே அதை அதிகாரிகள் அமுலாக்கப் போகிறார்களா அல்லது அவர்களே தனியாக ஒன்றை அமுலாக்கப் போகிறார்களா என்பது தான் கேள்வி. ஆகவே அரசு எடுக்கும் முடிவுகளை அதிகாரிகள் அமுலாக்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். தொழிலாளர் துறை சார்பாக குறைந்த பட்ச ஊதியத்தை அரசுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும் தந்தாக வேண்டுமென்றுதான் சொல்லி இருக்கிறோமே ஒழிய அவர்களுக்குத் தனி எக்சம்ஷன் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியும் முக்கியம், அதை விட நேரமும் முக்கியம்.